IJCRT.ORG ISSN : 2320-2882
INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)
An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# ஆலயமும் மரபிசை வடிவமும்

**ஆய்வாளர்:**
N. சேஷகோபாலன்,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
பதிவு எண்: 2246060006,
இசைத் துறை,
அண்ணாமலை பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.

**ஆய்வு நெறியாளர்:**
முனைவர். A .விஜய் கார்த்திகேயன், நாதஸ்வர
உதவிப் பேராசிரியர்,
இசைத் துறை,
அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.

## 01 . முன்னுரை

இந்திய இசையில் தென்னிந்திய கர்நாடக இசையும் (செவ்விசை), வடஇந்திய இந்துஸ்தானி இசையும் ஆகிய இருவகை பெரும் தாக்கத்தை உருவாக்கியுள்ளன. கர்நாடக இசை தென்னிந்திய மாநிலங்களில் நிலைத்து இருந்துவர, இந்துஸ்தானி இசை வட இந்தியாவில் ஆழமாகப் பரவியுள்ளது. இவ்விரு இசை வடிவங்களும் வெவ்வேறு தன்மைகளை கொண்டிருந்தாலும், இரண்டின் ஆதாரமும் சப்த ஸ்வரங்கள் ச, ரி, கம, ப, த, நி ஆகிய ஏழு ஸ்வரங்களே ஆகும். இந்துஸ்தானி மற்றும் கர்நாடக இசையில், இவை தனித்தன்மை வாய்ந்த பல பரிணாமங்களை உருவாக்குகின்றன.

## 02 . செவ்விசை (கர்நாடக இசை)

கர்நாடக இசை தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா, கர்நாடகா, தெலுங்கானா போன்ற தென் மாநிலங்களில் பரவலாக காணப்படுகிறது. இதில் குரலிசை மற்றும் கருவி இசை என இரண்டு முக்கியமான இசைபயன்பாடுகள் உள்ளன. கருவி இசை வகையில், நாதஸ்வரம், வீணை, வயலின், புல்லாங்குழல், கிளாரினெட், சாக்ஸஃபோன், தவில், மிருதங்கம், கஞ்சிரா போன்ற பல்வேறு கருவிகள் இசையின் நுட்பங்களை வெளிப்படுத்துகின்றன.

இவற்றில், நாதஸ்வரம் ஒரு தொன்மையும் மரபும் கொண்ட கருவியாக விளங்குகிறது. நாதஸ்வர இசையின் பாரம்பரியமிக்க பரிணாமங்களை ஆய்வு செய்து, அவற்றை ஆவணப்படுத்துவதே இந்த ஆய்வின் முக்கிய நோக்கமாகும்.

**03.ஆலயமும் இசையும்**

இறைவன் மற்றும் இசை ஒன்றுக்கொன்று இணைந்ததாகும்; இரண்டையும் தனியாகப் பிரிக்க முடியாது. இதற்குக் காரணம், நாதஸ்வரம் மற்றும் தவிலின்றி இறைவழிபாடுகளை நினைக்க முடியாது என்பதே ஆகும். பல ஞானிகள், துறவிகள் மற்றும் இசை அறிஞர்கள், இறைவன் தோன்றிய போது இசையும் தோன்றியது என்று பல்வேறு நூல்களில் குறிப்பிடுகின்றனர்.

இசை வழிபாட்டின் அடிப்படையில், நாதஸ்வரம் மற்றும் தவிலுக்கு ஆன்மீகச் சமய நிகழ்வுகளில் மிகுந்த முக்கியத்துவம் உண்டு. தொன்றுதொட்டு இன்று வரை, ஆலய வழிபாடுகளில் இவை ஒரு பிரதான இடத்தைப் பெற்றுள்ளன.

**04.இறைவழிபாட்டில் மரபுசார் இசை வடிவங்கள்**

இறைவழிபாட்டில், நாதஸ்வரம் - தவிலின் இடம் இன்றளவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அதனுள் தனித்துவம் வாய்ந்த இசை வடிவமாக மல்லாரி விளங்குகிறது. மல்லாரி என்பது நாதஸ்வர-தவிலிசை கருவிகளுக்காகவே உருவாக்கப்பட்ட இசை வடிவம். இது சுவாமி புறப்பாட்டின் போது மட்டும் வாசிக்கப்படும் இசை என்பதால், அது வேறு எந்த இசைக்கருவிகளுக்கும் பொதுவாக இருக்காது.

தற்காலத்தில், பிற இசைக்கருவிகளில் சில மாற்றங்களுடன் மல்லாரி இசைக்கப்படுவதாலும், அதன் மூலச்சிறப்பு நாதஸ்வரத்தில் மட்டுமே வெளிப்படும் என்பதாலும், இது ஒரு பாரம்பரிய இசை வடிவமாக தொடர்ந்து நிலைத்து நிற்கிறது.

மல்லாரியின் பிரிவுகள் பல பரிணாமங்களை கொண்டுள்ளன, ஒவ்வொன்றும் ஒரு குறிப்பிட்ட நிகழ்வுக்கு பொருத்தமாக அமைந்திருப்பது அதன் தனிச்சிறப்பாகும்.

**05.மல்லாரி வகைகள்**

1. தேர் மல்லாரி
2. தளிகை மல்லாரி
3. தீர்த்த மல்லாரி
4. திருப்புடை தாள மல்லாரி
5. பொது மல்லாரி

என்று பல நிகழ்வுகளுக்கு பல மல்லாரிகள் அமையப்பெற்றுள்ளது. உதாரணத்திற்கு பொது மல்லாரி ஒன்றின் சுர தாளக்குறிப்புடன் காணலாம்;

**மல்லாரி**
**தாளம் : திஸ்ர ஏகம்**
**அட்சரம் : 3**

சா , பா மபா - சசகம் || பா , - பா பநிப மா - பநி ||
, ப மா , - மா மபம கா || மபாம கா , - கா கமக ||
சா - கமாக சா , - சசா || பபா மமா ககா - மநிப ||
மகசா - நிபமகசா - பம || கசா - மகசா - கசா - சா ||

இதேபோன்று இறை வழிபாட்டில் மட்டும் இசைக்கப்படும் இசை வடிவங்கள் பல உண்டு . அதில் ஒன்று கெட்டிமேளம் அடங்கும் , கெட்டிமேளம் என்ற முக்கிய இசை வடிவம் இறைவனுக்குரிய பூஜைகள் செய்தல், தீபாராதனை, கும்பாபிஷேகம், பூர்ணாகுதி நிகழ்வு, திருக்கல்யாண வைபவத்தில் திருமாங்கல்யதாரண நிகழ்வு போன்ற முக்கிய தருணங்கள் அனைத்திலும் இந்த இசை வடிவம் இசைக்கப்படுகிறது. இந்த இசை வடிவத்தின் சுரமானது ஆதார சட்ஜம் ஆகும், ஆதார சட்ஜமம் என்பது நிலையான சுரம் என்பதால் முன்னோர்கள் இதனை மரபாக வைத்துள்ளனர். இது அனைத்துமே நாதஸ்வர இசைக்கருவிகள் மரபுசார் கையாளப்படும் தனித்துவமிக்க இசை வடிவங்கள்.

### 06.நாதஸ்வரம் & தவில் வழியாக இறைவழிபாட்டில் இசைக்கப்படும் இசை வடிவங்கள்

1. மல்லாரி
2. ரக்தி
3. தத்தக்கார பல்லவி
4. ஓடக்கூறு பாடல்
5. தேவாரம்
6. திருவாசகம்
7. திருப்பாவை
8. திருவெம்பாவை
9. திருப்புகழ்
10. மாலை மாற்றுப் பாடல்
11. நலுங்கு பாடல்
12. ஊஞ்சல் பாடல்
13. கும்மி பாடல்
14. சீதா கல்யாணம்
15. ஆனந்தம் பாடல்
16. எச்சரிக்கை பாடல் (படி ஏற்ற பாடல்)
17. ஓடம் பாடல்
18. காவடி சிந்து, கிளிக்கண்ணி
19. நோட்டு சுரம்
20. ஆலத்தி பாடல்
21. கெட்டிமேளம்
22. மங்களம் .

### 07.முடிவுரை

இவ்வாறு பல தனித்துவம் வாய்ந்த இசை வடிவங்கள் இன்றளவும் கையாளப்படுகின்றது என்பதே இக்கருவியின் தனிச்சிறப்பாகும். நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகியவற்றின் தனித்துவமான பண்புகள் மற்றும் அவற்றின் பாரம்பரிய வாசிப்பு நுட்பங்கள் கோவில் இசையின் முக்கிய அங்கமாகும். நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகிய இவை மரபுசார்ந்த இசைக்கருவிகளாக மட்டுமின்றி, தமிழர் வாழ்வியலின் ஒரு அங்கமாகவும் ஆலய வழிபாட்டில் அவசியமான கருவிகளாகவும் விளங்குகின்றன. இந்த கருவிகள் பாரம்பரிய இசை வடிவங்களை வெளிப்படுத்துவதற்கும், ஆலய நிகழ்வுகளை இசையால் சிறப்பிக்கவும் பயன்படுகின்றன.

ஆலய வழிபாட்டு நிகழ்வுகளில் மல்லாரி, ரக்தி, பல்லவி, ஓடக்கூறு போன்ற இசை வடிவங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை குறிப்பாக லய விண்யாசங்களோடு (தாள கோட்பாடுகளின் சிறப்புடன்) வாசிக்கப்படுவதால், நாதஸ்வர இசையின் தனித்தன்மை வெளிப்படுகிறது. மேலும், நாதஸ்வரம் மற்றும் தவில் ஆகியவை கோயில் நிகழ்ச்சிகள், கோயில் உற்சவங்கள் போன்ற வாழ்வியல் நிகழ்வுகளில் இணைந்து, தமிழர் பண்பாட்டின் அடையாளமாக விளங்குகின்றன.மேலும் இவை தமிழ்நாட்டின் பண்பாட்டு மரபுகளை பிரதிபலிக்கின்றன. இதன் காரணமாகவே இதனை ராஜவாத்தியம் மங்கள வாத்தியம் என்று போற்றி வழங்கியுள்ளனர்.

**பார்வை நூல்கள்:**


1. "நாதஸ்வரம்: மரபும் மாற்றங்களும்" – ***டாக்டர். கே.எஸ். கோபாலகிருஷ்ணன்***
    - Year: **2005 (2nd Ed.)**
2. "மல்லாரி: தெய்வீக இசை" – ***டாக்டர். எஸ். ராஜேஸ்வரி***
    - Year: **1998**
3. "Nadaswaram: The Divine Sound of South India" – ***Dr. B.M. Sundaram***
    - Year: **1999**